1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) கால்நடை மருத்துவ மனேயுடன் இணேந்த கேந்திர கிராம நிலேயம் ஒன்று செயற்கை கருத்தரிப்பு வசதிகளுடன் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயத்தின் வடகிழக்கு மூலேயில் அமைந்துள்ளது.

(இ) இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கே. எஸ் கணபதி: தலேவரவர்களே, திருக்கோவில் என்பது ஒரு பொதுவான இடம். அங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள், அனேவரும் வருகிருர்கள். அப்படி வந்து செல்கின்றவர்களுக்கு இது இடையூருக இருப்பதால், உடனடியாக இதை அகற்றுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலேவரவர்களே, நான் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். அறநிலேயத் துறையின் கருத்தை அறிந்து தான் செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலேவரவர்களே, இதிலே கருத்து வேற்றுமைக்கே இடமில்லே. உடனடியாக நீக்கினுல் நலமாகவிருக்கும் என்று கருதுகிறேன்.

Cases Booked by the Vigilance and Anti-Corruption Directorate

*318 *Q*.—THIRU M. ARUMUGASWAMI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any cases have been booked by the Vigilance and Anti-corruption Directorate, within the last six months against any Officers of the Civil Supplies Department; and

(*b*) if so, the details thereof?

ஒழுக்கக் கண்காணிப்பு, லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகத்தாரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உணவு வழங்கல் துறையின் அதிகாரிகள் எவர் மீதேனும் கடந்த ஆறு திங்களில் ஒழுக்கக் கண்காணிப்பு லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகத்தாரால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

[1974 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) கடந்த ஆறு மாதங்களில், உணவுப் பொருள் வழங்கல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மீது ஒழுக்கக் கண்காணிப்பு லஞ்ச ஒழிப்பு இயக்குநரால் மேற்கொள்ளப்பட்ட வழக்குகளின் விவரம் :—

	அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள்.	அரசிதழ் பதிவு பெருத அதிகாரிகள்.
	(1)	(2)
விசாரணைகள் மேற்கொள்ளப் பட்ட வழக்குகளின் மொதத எண்ணிக்கை.	7	9
தொடக்க விசாரணையின் பின்னர் தள்ளுபடி செய்யப் பட்ட வழக்குகளின் எண் ணிக்கை.	3	—
விரிவான விசாரணையின் பின்னர் தள்ளுபடி செய்யப் பட்ட வழக்குகளின் எண் ணிக்கை.	—	2
புலனாய்வு நடந்து வரும் வழக்குகளின் எண்ணிக்கை.	4	7

Kerosene

* 319 Q.—Thiru A. R. Damodaran : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state---

(*a*) the quantity of Kerosene allotted by the Government of India for distribution by the Oil Companies during each of the months from October, 1973 to February 1974; and

(*b*) whether any communication has been received from the Government of India regarding its availability in each of the coming months from March to June 1974?

மண்ணெண்ணெய்

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எண்ணெய் நிறுவனங்கள் மண்ணெண்ணெய் வழங்குவதற்காக 1973 அக்டோபர் முதல் 1974 பிப்ரவரி வரை ஒவ்வொரு மாதமும் இந்திய அரசு ஒதுக்கிய மண்ணெண்ணெய் அளவு யாது ?

(இ) அடுத்து வரும் 1974 மார்ச் முதல் ஜூன் வரை ஒவ்வொரு மாதத்திலும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு பற்றி தகவல் ஏதும் இந்திய அரசிடமிருந்து வந்துள்ளதா ?